Crl.Misc.39

D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.125/2009

**P.W**. 3(LW10)

| | |
|---|---|
| Name | : திரு.முருகன் |
| Father/Husband Name | : திரு. |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026

மனுவின் பேரில் திரு.முருகன் காவல் உதவி ஆய்வாளர் இந்த வழக்கில் கூடுதல் சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மாமல்லபுரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான கோவிந்தராஜ் உதவி ஆய்வாளரின் கையெழுத்தும் கையொப்பமும் நன்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 03.03.2009 ம் தேதி பகல் 3.00 மணியளவில் மாமல்லபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக திரு.கோவிந்தராஜ் நிலைய பொறுப்பில் இருந்தபோது உதயசூரியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து அதனடிப்படையில் நிலைய குற்ற

எண்.86/2009 இ.த.ச.பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2) –ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின் அவர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார், சுகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். ( **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு சாட்சிகள் உதயசூரியன், பஞ்சாட்சரம், கார்மேகம், மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான குமார், சுகுமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

4. பின் இவ்வழக்கின் எதிரி ரூபன் என்பவரை கடந்த 03.03.2009 அன்று இரவு 20.45 மணியளவில் மாமல்லபுரம்– சென்னை செல்லும் இ சி ஆர் ரோட்டில் மாமல்லன் சிலை அருகே கைது செய்தபோது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சங்கர், குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 18 அங்குலம் கொண்ட இரும்பு கத்தி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியான "என்னை கூட்டிக்கிட்டு போனா சம்பவம் நடந்த இடத்தையும் நான் வெட்டிய கத்தியை செடியில் போட்ட இடத்தையும் காட்டுகிறேன்" என்று சொன்ன **அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான 18 அங்குலம் கொண்ட இரும்பு கத்தியை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். **(படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**(18 அங்குலம் கொண்ட இரும்பு கத்தி ஒன்று அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரி பிரகாஷ் என்பவரை கடந்த 03.03.2009 அன்று இரவு 20.00 மணியளவில் மாமல்லபுரம்– சென்னை செல்லும் இ சி ஆர் ரோட்டில் மாமல்லன் சிலை அருகே கைது செய்து அவர் தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் குமார், சங்கர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தார். பின்னர் இரண்டு எதிரிகளையும் நீதிமன்றக் காவலுக்குட்படுத்தினார்.

5. இவ்வழக்கில் சாட்சிகள் காலமேகம், சுகுமார், குமார் ஆகியோர்கள் எதிரிகள் மிரட்டியதாக வாக்குமூலம் அளிக்கவில்லை என்பதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை இ.த.ச.பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2)லிருந்து 341, 294(பி), 324 இ.த.ச. வாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. இவ்வழக்கில் காயம்பட்ட நபரான சாட்சி பஞ்சாட்சரம் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றார். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சாட்சி பஞ்சாட்சரம் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியுள்ளதால் வழக்கின் சட்டப்பிரிவினை 341, 294(பி), 324 இ.த.ச. விலிருந்து 341, 294(பி), 326 இ.த.ச. வாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தால். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

7. இத்துடன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294(பி), 326–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். அவரது

விசாரணையில் அ.சா.1, அ.சா.2 வரையானோர் வழக்கு சம்பவம் குறித்து வாக்குமூலம் அளித்துள்ளார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

எதிரிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றாலும் எதிரிகளிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி ரூபன் என்பவரிடமிருந்து வழக்கு சொத்தினை கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 னிடமிருந்து விசாரணை அதிகாரி புகார் எதையும் பெறவில்லை என்றாலும் சாட்சிகளை அவர் சரிவர விசாரணை செய்ய வில்லை என்றாலும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நிலையத்தில் வைத்து வழக்குக்கு ஏதுவாக தயார் செய்யப்பட்டுள்ளன என்றாலும் வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.